தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

சனிக் கிழமை, 1979 அக்டோபர் 27.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. முனுஆதி அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

(1) வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்.

சென்னையில் அண்ணா, பெரியார் பிறந்த நாள் விழா.

* வினா எண். 1—திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

சென்னையில் அண்ணா, பெரியார் இவர்கள் பிறந்த நாளை முன்னிட்டு 15–9–1978, 17–9–1978-ல் அவர்கள் சிலைகளை அலங்கரிக்கச் செய்யப்பட்ட செலவு எவ்வளவு ?

திரு. எம். வின்சென்ட் (அமைச்சரின் பேரவைச் செயலர்) :

சென்னையில் அண்ணா, பெரியார் இவர்களின் பிறந்த நாட்களைக் கொண்டாடுவதை முன்னிட்டு அவர்களின் சிலைகளை அலங்கரிப்பதற்கு ஏற்பட்ட செலவுகளின் விவரங்கள் பின்வருமாறு :—

	ரூ.
அண்ணா சிலையை அலங்கரிக்க 14, 15, 16–9–1978 ஆகிய மூன்று நாட்களில் ஆன மொத்தச் செலவு.	5,766.00
பெரியார் சிலைகள் (இரண்டு) அலங்கரிக்க 17–9–1978, 18–9–1978 ஆகிய இரண்டு நாட்களில் ஆன மொத்த செலவு.	8,157.28
மொத்தம் ..	13,923.28

திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிலை அலங்கரிப்போடு, பெரியார் அவர்களுடைய கொள்கைகளான கடவுள் இல்லை, இல்லவே இல்லை என்ற அடிப்படையில் கோயில் நிலங்களை உழுபவர்களுக்குச் சொந்தமாக்குவதோடு, அண்ணா அவர்கள் 'வேலைக்காரி'யில் பகலில் பண்டார சன்னிதிகளாக இருக்கிற உங்களுக்கு ஏன் நிலம் என்று

கேட்டிருக்கிறார். பண்டார சன்னிதிகளுக்கு இருக்கிற நிலத்தையும் கோயில்களுக்கு இருக்கிற நிலத்தையும் பெரியார், அண்ணா அவர்கள் கூறியபடி உழுபவர்களுக்குச் சொந்தமாக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

திரு. எம். வின்சென்ட் (அமைச்சரின் பேரவைச் செயலர்) : பேரவைத் தலைவரவர்களே, கேள்வி சிலைகளை அலங்கரிப்பதைப்பற்றி.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, இத்தகைய பேரறிஞர் அண்ணா, தந்தை பெரியார் ஆகியவர்களுடைய சிலைகளை எல்லாம் அமைக்கும்போது அந்தந்தப் பகுதிகளிலே உள்ள உள்ளாட்சித்துறை நிறுவனங்கள், அதாவது, நகராட்சி மன்றங்கள், ஊராட்சி ஒன்றியங்கள் ஆகியவற்றிடம் ஒப்படைக்க வேண்டுமென்ற விதிமுறை ஒன்று இருப்பதாகத் தெரிகிறது. அவர்களே அந்தப் பராமரிப்பினையும் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று இருப்பதாகவும் தெரிகிறது. எனவே, சென்னையில் அலங்கரிக்கப்பட்டிருப்பதைப் பற்றி அமைச்சர் செயலர் அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். எல்லா ஊர்களிலும் அத்தகைய முறையில் அண்ணா அவர்கள் சிலைகள், தந்தை பெரியாருடைய சிலைகள் ஆகியவை அலங்கரிக்கப்பட்டனவா என்பதை அறிய விரும்புவதோடு, குறிப்பாக மாயூரத்தில் எவ்வளவோ தடவை எடுத்துச் சொல்லியும் அந்தச் சிலை சுத்தம் கூடச் செய்யப்படாமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா ?

திரு. எம். வின்சென்ட் (அமைச்சரின் பேரவைச் செயலர்) : பேரவைத் தலைவரவர்களே, கேள்வி சென்னையிலே உள்ள சிலைகளைப்பற்றி.

திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையிலே உள்ள சிலை என்றாலும், தமிழகத்திலே எங்கிருந்தாலும் அண்ணா சிலை, பெரியார் சிலை (குறுக்கீடு) மன்னார்குடியிலே கூட பெரியார் சிலை வைக்க அனுமதி கேட்டு பல நாட்களுக்கு முன்பு மனு அனுப்பப்பட்டிருக்கிறது...

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தங்கள் மூலக் கேள்வி சென்னையிலுள்ள சிலைகளைப் பற்றித்தான். தமிழகம் பூராவும் உள்ளவை பற்றிக் கேட்கமுடியாது.

திரு. கூத்தகுடி ச. சண்முகம் : தலைவரவர்களே, சென்னையிலே உள்ள அண்ணா, பெரியார் ஆகியோர்களுடைய சிலைகளின் எண்ணிக்கை என்ன ? எத்தனை சிலைகளை அலங்கரித்திருக்கிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

திரு. எம். வின்சென்ட் (அமைச்சரின் பேரவைச் செயலர்) : பேரவைத் தலைவரவர்களே, சென்னையிலே அண்ணா சிலை ஒன்று, பெரியார் சிலை இரண்டு அலங்கரிக்கப்பட்டிருக்கின்றன.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, சென்னையிலே உள்ள சிலைகளைப்பற்றித்தான் மூலக் கேள்வி வந்திருக்கிறது என்று அமைச்சரின் பேரவைச் செயலர் அவர்கள் இங்கே அறிவித்தார்கள். மாநிலம் பூராவும் எத்தனை சிலைகள், தந்தை பெரியார், அண்ணா சிலைகள், பெருந்தலைவர் காமராஜர் சிலைகள் இருக்கின்றன என்ற கேள்வியை எழுப்பி இருக்கிறேன். அந்தக் கேள்வியே வரவில்லையே, அதற்கான விளக்கத்தை அமைச்சரின் பேரவைச் செயலர் அறிவிப்பார்களா ?

(விடை இல்லை).

Government servants' Family Pension

*Q. No. 2 : Thiru Salem M. ARUMUGAM : Will the Hon. the Minister for finance be pleased to state :

(a) whether the age limit for the receipt of FamilyPension by daughters and sons of deceased State Government Officers have been raised: and

(b) if so, the details thereof?

திரு. எம். வின்சென்ட் (அமைச்சரின் பேரவைச் செயலர்) :

(அ) ஆம்.

(இ) இறந்து விட்ட அரசுப் பணியாளரின் திருமணமாகாத மகள் 24 வயது வரையிலும் திருமணமாகாத மகன் 21 வயது வரையிலும் குடும்ப ஒய்வூதியம் பெறலாமென்று இப்போது வரையறுக்கப்பட்டுள்ளது.

திரு. சேலம் மு. ஆறுமுகம் : பேரவைத் தலைவரவர்களே, இதற்கு முன்னாலிருந்து ஒய்வு ஊதிய வயது வரம்பு என்ன ? தற்பொழுதுள்ள வயது வரம்பு எப்பொழுதிலிருந்து அமுலாகும் ?

திரு. எம். வின்சென்ட் (அமைச்சரின் பேரவைச் செயலர்) : பேரவைத் தலைவரவர்களே, இப்போது வரையறுக்கப்பட்டுள்ள, 24 வயது, 21 வயது வரையறுக்கப்பட்டுள்ள, இந்த உத்தரவு